INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s167

OPEN ACCESS

# பெரியபுராணத்தில் காணப்படும் வேளாண் மக்களின் பண்பாட்டுக் கூறுகள்

**கோ. உமா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Elements of Agricultural People found in Periyapuranam

**G. Uma** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: umatamil25@gmail.com

Received: 08-07-2022
Revised: 17-09-2022
Accepted: 10-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Periyapuranam is a Tamil text, although the text is seen as a devotional literature, it can be considered as a historical treasury of Tamil Nadu in order to explain the culture of Tamils. In such a way this article helps us to know the cultural elements of agriculturalists in the Nayanmar period. It clearly shows the devotion of the Nayanmars and their attachment to the lord. While discussing the history of the Nayanmars the wealth of the city and country, the professions and the noble deeds of the servants are revealed. The article gives a clear information about agriculture which is the basic occupation of Tamil people.

**Keywords:** Culture, Paddy, Love, Charity, Hospitality, Tax, Food, Dress, Intracapsular, Agriculturist.

## முன்னுரை

பெரியபுராணம் எனும் தமிழ் தேசியக்காப்பியம் நாயன்மார்களின் வாழ்க்கைவரலாற்றை எடுத்துரைப்பது. அவ்வரலாற்றில் நாயன்மார்களின் காலகட்ட மக்கள், வாழ்வு, தொழில், பண்பாடு ஆகியன ஒருசேர கையாளப்பட்டுள்ளது. முக்கிய வாழ்வாதார தொழிலாக வேளாண்மை அமைந்திருந்தது. 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் பெரியபுராணம் சேக்கிழாரால் எழுதப்பெற்றது. இப்புராண நூல் கட்டுகதைகளை எடுத்துரைப்பதன்று. அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் ஏற்புடையதான வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. அதாவது வேளாண்மையியல் கருத்துக்களை தெளிவாக விளக்கி காட்டுகிறது. வேளாண்மை என்பதை கடவுளுக்கு ஆற்றும் தொண்டாக பின்பற்றினர் உலகியலால் இன்பம் செழிக்கும் உயிரியலால் அன்பு செழிக்கும், கடவுளியலால் அகவாழ்வு மலரும். சேக்கிழாரின் பெரியபுராணம் உயிரியல் சார் சிந்தனைகளை வேளாண் தொழில் அடிப்படையில் ஒப்பு நோக்கப் பயன்படுகிறது. இயல், இசை, நாடகம் என்னும் முப்பரிணாம வளர்ச்சியோடு அறிவியல் தமிழ் என்னும் மற்றொரு கூற்றினையும் உள்ளடக்கி வளர்ச்சி பெற்று வருகிறது. கணிதம், புள்ளியியல், இயற்பியல், வேளாண்மையியல், வானியல் போன்ற பல்வேறு அறிவியல் முறைகளில் தோன்றிய நூல்கள், இதழ்கள், ஆய்வுக்கட்டுரைகள் அறிவியல் கலைச்சொல்லாக்கம் போன்ற பலவும் அறிவியற்றமிழில் அடங்கும்.

## பண்பாடு

பண்பாடு என்பது அகவளர்ச்சி, புறவளர்ச்சி எனும் இரண்டையும் உள்ளடக்கியது. உணவு, உடை, உறையுள் போன்ற புறவளர்ச்சியையும், அன்பு, அருள், ஈகை எனும் அகவளர்ச்சியையும் இணைத்தது பண்பாடாகும். ஆங்கிலத்தில் Culture எனும் சொல் பண்பாட்டைக் குறிப்பது. பண்பாடு ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள் எனும் பொருளில் ஆளப்படுவது. அதாவது செம்மைப்படுத்தல் என்பதாகும். நிலத்திற்கும் உள்ளத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அதனாலே தமிழர்கள் இரண்டையும் `புலன்' என்ற சொல்லால் அழைத்தனர். 'நிலபுலன்' என்பர். பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை என்ற சொற்களால் பண்பாட்டை அழைக்கின்றது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது"

என்று கலித்தொகை குறிப்பிடுகிறது (Sengai Podhuvan, 2008). 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அவ்வாறு குறிப்பிடுவது பண்பாட்டை விளக்குவதாய் அமைகிறது. வேளாளர் குலம் பண்பாட்டை எடுத்துரைப்பது. வேளாளர்குலம் இந்நாட்டில் எவருமில்லை. `மேழிசைச் செல்வம் கோழைபடாது என்பது இந்நாட்டார் கொள்கை. மேழியே வேளாண்மையின் சின்னம் ஆகும். தமிழ் வேந்தரின் திருமணவிழாவில் ஔவைப்பிராட்டி அவர்கள் 'அரசே உன் நாட்டில் வரப்பு உயர்க' என்று வாழ்த்தினார் எனில் அவ்வாழ்த்துரையின் பொருள் 'வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல்லுயரும் நெல்லுயர குடியுயரும் குடியுயர கோன்உயர்வான்' என்பதாகும்.

உழவனே நாட்டின் உயிர்நாடி அவனது ஊக்கமே அரசனது ஆக்கம் அவன் நட்டநாற்று குடிதழைத்தால் மன்னன் குடிதழைக்கும்.

"மேழி பிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும்

ஆழிதரித்தே அருளும் கை சூழ்வினையை நீக்கும் கை

என்றும் நிலைக்கும் கை நீடுழி காக்கும் கை காராளர் கை"

எனப்பாடுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம் (Sengai Podhuvan, 1967). பயிர்த்தொழிலைக் குறிக்கும். சொல் வேளாண்மை என்பது. திருஞானசம்பந்தர் வேளாளருடையப்பண்புகளைத் தேவாரதிருப்பாட்டிலே

"வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையாள் மிக்கிருக்குந்

தாளாளர் ஆக்கூரிந்நான்றோன்றி மாடமே"

என்று பாடுகையில் வேளாளர் சிறந்த உழைப்பாளர் என்பதும் கொடையாளர் என்பதும் நன்குணரப்படுகிறது (Rathinasabapathi, 1982). சொன் சொல்தவறா பேராண்மையாளராகத் திகழ்ந்தனர்.

"ஊழிப் பேரினும் பெயரா உரையுடைய பெருக்காளர்"

எனும் கம்பரின் அடிகளை மேற்கோள்காட்டி விளக்கியுள்ளர் (Sethupathi Pilai, 1948).

## வேளாண்மை மக்களும் பண்பாட்டுக் கூறுகளும்

உலகிலுள்ள பல பண்பாடுகளுள் சிறந்ததும் முதன்மையானதும் தமிழ்மக்களின் பண்பாடே ஆகும். தமிழ், கலாச்சாரம், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றியுள்ளது.

தமிழ்மொழி இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை, தற்காப்புக்கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், உணவு, உடை, தத்துவம், மரபுகள், சடங்குகள் மூலம் அறிவியலை வெளிப்படுத்துகிறது. காதல், வீரம், நட்பு, ஈகை, கொடை, ஒருமைப்பாடு ஆகியன பண்பாடுகளுள் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

## காதல்

அன்பின் அடியாக ஒருவனும் ஒருத்தியும் உளமொத்து அமையும் வாழ்வே காதலாகும் என்பதை,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட்பேற"

என்ற குறள் வலியுறுத்துகிறது (Acharya, 2016). ஒப்புடைய முதன்மையான வேளாண்குலத்திலும் குடியிலும் தலைவராய் விளங்கியபு கழனார் நிலையாமையை உணர்ந்து உயிர்துறக்க அவருடைய மனைவியரான மாதினியாரும் சுற்றத்துடன் அனைவரையும் நீத்தார். தன் கணவரைவிட்டு பிரியாது கற்பு நெறியுடன் புகழனார் மீது கொண்ட காதல் கணவருடன் உயிர்நீத்தார் என பெரியபுராணம் விளக்குவதாக

"பெற்றிமையால் உடன்ள ன்றும் பிரியாத உலகெய்தும்

கற்பு நெறிவழுவாமல் கணவனாருடன் சென்றார்"

என்றடிகள் அமைந்துள்ளது (Manickam, 2016). திருநாவுக்கரசரின் தமக்கை திலகவதியாருக்குத் திருமணம் முடிப்பதற்காக நிச்சயிக்கப்பட்டார். நிச்சயிக்கப்பட்ட கலிகாமர் போரில் இறந்துபடவே பிரிவிற்காக தன்னைமாய்த்துக்கொள்ளத்துணிந்தவர் திலகவதியார் ஆவார். திருமணம் முடிக்காமலேயே தன்தாய்தந்தை திருமணம் முடிக்க இசைந்தவருக்கு உரியவளானேன் என்றுதிலகவதியார் கூறியது காதல் வாழ்வின் அடிப்படை என்பதை

"எந்தையும் எம் அன்னைவயும் அவர்க்கெனக் கொடுக்க இசைந்தார்கள்

அந்தமுறையார் அவர்க்கே உரியதுநான் ஆதலினால்

இந்தவுயிர் அவரயிரோடிசைவிப்பதன்

பன்னிருத்திருமுறைகள்"

என்ற பெரியபுராண அடிகள் விளக்குவதிலிருந்து வேளாண்மாந்தர்கள் காதல்வாழ்வை அடியாக கொண்டு தங்களது வாழ்வை மேற்கொண்டனர் என்பது அறியமுடிகிறது (Manickam, 2016).

## ஈகை

வேளாண்மை என்ற சொல்லுக்கான பொருள் விளக்கும் போது `ஈகை'எனும் பொருளுடையது என அகராதி நூல்கள்விளக்கம் அளிக்கின்றன. அதாவது பதில்உதவி செய்யமுடியாத ஏழைகளுக்கும் கொடுத்துதவுவதே ஈகையாகும் என்பதை,

"வறியவர்க்கு ஒன்று ஈவதேஈகை மற்றெல்லாம்

குறியெதிர்ப் பைநீரது உடைத்து"

என்ற குறள் எடுத்துரைக்கிறது (Acharya, 2016). வறியோரின் முகம்அறிந்து அவர்கள்வேண்டாது அவர்களுக்கு வேண்டியதைவழங்கி அதனால் இறைப்பதம் அடைந்த சான்றோர்களாக வேளாண்மக்கள் விளங்கினர். இனிய சுவைதரும் நெய்கலந்த உணவை அடியார்களுக்கு உபசரித்து அகமகிழும்படியாக விருப்பத்துடன் அமுது உபசரிப்பர். அடியார்கள் வேண்டாது மற்றப்பொருள்களையும் வழங்கும் நியதியை நாள்தோறும் மேற்கொண்டனர் என்பதை,

"ஆயபொருளும் அவர்வேண்டும் படியால் உதவி அன்புமிக

ஏயமாறு நாடோறும் இணைய பணி செய்தின் புற்றார்"

என்றடிகள் வாயிலாக மூர்க்கநாயனாரின் ஈகைகுணம் உலகு அறியவி ளக்கியுள்ளார் சேக்கிழார் (Manickam, 2016).

"வேளாளர்கள் என்றவர்கள் வள்ளண்மையால் மிக்கிருக்கும் தாளாளர்"

என்றடியை மேற்கோள்காட்டி உயர்வான ஈகைப் பண்பிற்குரியவர் வேளாளர் என்றகருத்தை நிறுவுகிறார் (Maraimalai Adigal, 1954). வேளாண்மை தொழில்புரிவோர் ஈகைப்பண்பில் மேம்பட்டோர் என்பதை பெரியபுராணம் வாயிலாக அறியமுடிகிறது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் பெரும்பாலோர் ஈகைக்குணத்தில் இறைவனைக்கண்டவர்களாவர். இளையான்குடிமாரனார், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஏயர்கோன்கலிகாமர், மூர்க்கர், முனையடுவார், கோட்புலியார் போன்றோர் இம்மார்க்கத்தில் இறையடி சேர்ந்தவர்களாவர்.

## விருந்தோம்பல்

விருந்து எனும் சொற்பதம் புதுமை எனும் பொருளுரைப்பதாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியவராகதம்மில் நாடிவரும் மக்களை விருந்தினர் எனகுறித்தனர். அவர்களுக்கு முறையாக உணவுபசரிப்பதே இல்லறகடமையாக கொண்டிருந்தனர்.

"அல்லாயினும் விருந்துவரின் உலுக்கும்

முல்லைச் சான்றகற்பின்மெல்லியல்"

என்ற நற்றிணை அடிகள் விருந்தினரின் முகம்வாடிவிடாதபடி இன்முகத்துடன் வரவேற்று அறுசுவை உணவுகளையும் படைத்து மகிழ்ந்தனர் என்பதை எடுத்துரைக்கின்றது (Avvai Duraisamy pillai, 1968).

வேளாண்மாந்தர்கள் தங்களது விளைச்சலில் ஆறில் ஒருபங்கை அரசருக்குவரியாகச் செலுத்தினர். எஞ்சிய விளைச்சலைக் கொண்டு முதலில் செய்யத்தக்க அறங்களில் முதலாவதாக இறைவனுக்கு பூசைசெய்வர். அதற்கடுத்த நிலையில் விருந்தினரை உபசரிக்கும் மேன்மை உடையவராய் திகழ்ந்தனர் என்பதை,

"அரசு கொள்கடன்கள் ஆற்றிமிகுதி கொண்டறங்கள் பேணிப்

பரவருங்கடவுட்போற்றிக்குர வரும் விருந்தும் பண்பின்"

என்றடிகள் விளக்குகிறது (Manickam, 2016). வேளாண்மைத்தொழில் தோற்றம் உயிர்களுக்கு அறம்செய்வதற்கே என்ற இறைச்சிந்தை உடையவர்களாக வேளாளர்கள் இருந்தனர் என்பதை பெரியபுராணம் விளக்குகிறது.

பெரியபுராணம் கூறும் வேளாண்மை பண்பாடுகளானது அகவாழ்வின் அடிப்படையில் தோன்றியது என்பதை விளக்குகிறது. சான்றாக காதல், ஈகை, விருந்தோம்பல் ஆகிய பண்புகள் அமைகின்றது.

மக்களின் உயிரியல் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றன வேளாண்மை பண்பாடுகளுள் அடுத்ததாக அமைகிறது.

மனிதன் மட்டுமல்லாது அனைத்துயிர்களும் உயிர்வாழ தேவைப்படுவது உணவாகும். அவ்வுணவினை மனிதன் தானே உற்பத்தி செய்து கொள்கிறான். பண்டைக்காலம் தொட்டே மருதநிலங்களில் பலவகையான நெல்வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன எனும்போதே முக்கியஉணவாக மருதநிலவிளைச்சல் அமைந்திருந்ததை அறியமுடிகிறது. செந்நெல், சால்நெல், மூங்கில்நெல், கார்நெல் ஆகியன பயிரிட்டனர் என்பதை பெரியபுராணம் வாயிலாக அறியமுடிகிறது. செந்நெல் அரிசியோடு மாவடு, செங்கீரை ஆகியன இணைத்து உண்டனர்.

"நல்ல செங்கீரைதூயமாவடு அரிசி"

குறிஞ்சி நிலத்தில் விளையும் தினையினைத் தேன் கலந்து உண்ணும் வழக்கம் இருந்ததையும், மூங்கில் அரிசியினை குற்ற உணக்கி பால் சேர்த்து சமைத்து உண்டனர் (Manickam, 2016). செந்நெல் அரிசியைக் கரும்புசாறு இணைத்து சமைத்து உண்ணும் வழக்கம் உழவர்களிடம் இருந்தது. மருதநில

வயல்பரப்புகளிலும், நீர்நிலைகளிலும் மீன்கள் நிறைந்ந்விளங்கியதால் நெல்லரிசி சோற்றோடு மீனை இணைத்து உணவாக உட்கொண்டனர் என்பதை,

"தூநெல்லன்னம் நெய் கன்னலின் கணிய தண்டுறையூர்

மீனிறைந்த பேருணவின் வேலை வைப்பிடங்கள்"

என்றடிகள் வாயிலாக அறியமுடிகிறது (Manickam, 2016). பெரியபுராணம் உணர்த்தும் உணவுமுறைகளைப்பற்றி பெரும்பாணாற்றுப்படையும் விளக்குகிறது.

"நெடுங்குரல் பூளைப் பூவினன்ன

குறுந்தாள் வரகின் குறள விழச் சொன்றிப்

புகரிணர் வேங்கை வீகண்டன்ன"

எனும் பாடலில் உழவர்கள் பூளைப்பூப் போன்ற வரகுச்சோற்றை அவரைபுழுக்களோடு உண்டதையும் அறியமுடிகிறது. இவையல்லாதுகறி, தயிர், நெய், பால் முதலான பொருள்களையும் உணவில் சேர்த்துக்கொண்டனர் (Raghavaiyankar, 1958).

## உடை

வேளாண்மைத்தொழிலை மேற்கொள்ளும் உழவர்களில் ஆண்கள் இடையில் ஓர்ஆடையும் மேலே துண்டும் அணிந்துகொள்வர். சிலர் மேலாடை அணிவதும் உண்டு. இது `கஞ்சுகம் எனப்பட்டது.

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே"

என புறநானூறு கூறுவது போல உழவர்களின் ஆடையமைப்பு அமைந்திருந்தது (Avvai Duraisamy pillai, 2000). பெண்கள் புடவையுடுத்தியிருந்தனர் என்ற செய்தியை

"பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ்

நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ"

என்ற சிலப்பதிகாரப்பாடல்வழி அறிகிறோம் (Puliyur Kesikan, 2013). இது பெண்கள் உடலைத்துணியால் போர்த்துக்கொள்வதையும் குறிக்கிறது. பெரியபுராணத்தில் உழவர்குலமக்களின் ஆடைகளாக 'கோசிகம், பச்சிலை, தூரியம், கோவணம், சிற்றாடை, வல்லி, கொய்சகம்' போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உழவர்குல சிறுமியர் இடையில் மேகலையும் இணைந்த சிற்றாடை அணிந்திருந்தனர்.

"பூப்பயிலுஞ் சுருட்டு குழலும் கலையணி சிற்றாடையுடன்"

என்றடிகள் மானக்கஞ்சாறநாயனார் புராணத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது (Manickam, 2016). இவையல்லாது `முஞ்சிப்புல்'எனும் ஒருவகையான தருப்பைப்புல்லை அரைஞாணாக இடையில் அணிந்திருந்தனர் என்பதை அமர்நீதிநாயனார்புராணம்

"குஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்

தஞ்சமாமறைக் கோவண ஆடையின் தசைவும்"

என்றடிகள் வாயிலாக விளக்குகிறது. உழத்தியர் மணமுடைய மலர்களை நெய்பூசிப் பின்னப்பட்ட தலையில் சூடியவர்களாகவும் காணப்பட்டனர் (Manickam, 2016). உலகிற்கு பண்பாட்டை விளக்கிச் சென்றவர்கள் வேளாண்மைக்குலமாந்தர்கள் என்பதைப் பெரியபுராணம் நன்குவிளக்குகிறது.

## உறையுள்

உழவர்குலமக்களின் வீடுகள் நெடியச்சுவர்களைக் கொண்டிருந்தன. அவற்றில் வேளாண்மைத்தொழிலுக்கு உதவும் வண்டிச்சக்கரங்களும் கலப்பைகளும் சார்த்தி வைக்கப்பட்டிருந்தன.

வீட்டின் முன் பெரியயானைகள் நிற்பது போன்ற தானியங்களைச் சேமிக்கும் 'குதிர்கள், நெற்கூடுகள்' இருந்தன. பக்கத்தில் மாட்டுத்தொழுவம் இருந்தது. கரியவைக்கோலால் வீடுகள் வேயப்பட்டிருந்தன. முள்வேலி இட்டு பாதுகாப்புடையதாக உழவர்களின் வீடுகள் அமைந்திருந்தன.

"பற்றிய பைங்கொடிச் சுரைரமற் படர்த்த பழங்கூரையுடைப்

புற்குரம்பைச் சிற்றில் பலநிறைந்துளதோர் புலைப்பாடி"

என்றடிகள் மருதநிலத்தருகே புல்லால் வேயப்பட்ட சிறியஇல்லங்கள் அமைந்திருந்ததாக பெரியபுராணம்வழி அறியமுடிகிறது (Manickam, 2016).

## முடிவுரை

ஒரு செயலைத் திட்டமிடுதலைக் காட்டிலும் அத்திட்டங்களை நடைமுறைக்குக் கொணர்ந்து வாழ்ந்து காட்டுதலே சிறப்புடைய பண்பு என்றுணர்த்தியவர்கள் வேளாண்மைமாந்தர்களாவர். வேளாண்மை மாந்தர்களின் பண்பாடு உலகிற்குவித்திட்ட பண்பாடாகும். தமிழ் மொழியில் எழுந்த இலக்கியங்களில் பெரியபுராணத்தின் வாயிலாக மனிதனின் பண்பாட்டை வித்திடச்செய்தவர்கள் வேளாண்மையாளர் என்பது அறியமுடிகிறது. பண்பாடு அகவளர்ச்சியையும் புறவளர்ச்சியையும் கொண்டு அமைகிறது. வேளாண்மையாளர்கள் உலக உயிர்களைத் தன்னுயிர் போலஎண்ணி போற்றியது அவர்களது ஈகைப்பண்பில் இருந்து அறியமுடிகிறது. அகவளர்ச்சியைப் பேணும் காதல், வீரம், ஈகை, கொடை ஆகியன அன்பின் அடிப்படையாகத் தோன்றியதை பெரியபுராணம் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது. உலகிற்கு பண்பாட்டை அறிமுகம்படுத்திய வேளாண்மக்கள் அவர்களின் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அமைத்துக்கொள்வதில் முன்னோடியாகத் திகழ்ந்தனர். செந்நெல், வெண்ணெல், மூங்கில்நெல், மலைநெல், கார்நெல், சாலிநெல் போன்ற நெல்வகைகளை முக்கியஉணவாகக் கொண்டனர். என்பவை பெரியபுராணத்திலிருந்து வேளாண்பாகுபாடு குறித்து அறியஉதவுகிறது.

## References

Acharya, P.S. (2016) Thirukkural, Narmatha Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy pillai, S. (1968) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy pillai, S. (2000) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Lakshumanaswami, K. (1977) Kappiyamarapu, Annamalai University, Chennai, India.

Manickam, A. (2016) Panniruthirumuraikal, Varthamaan Pathippagam, Chennai, India.

Maraimalai Adigal, (1954) Vellalar Nagarigam, Manivasagar Pathippagam, Chennai, India.

Nachinarkiniyar, (1925) Kalithogai, U. Ve.SA Library, Chennai, India.

Puliyur Kesikan, (2013) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Raghavaiyankar, R. (2016) Perumpanatrupadai, Saradha Pathippagam, Chennai, India.

Rathinasabapathi, V. (1982) Thirugyana Sampandar Devaram, Madras University, Chennai, India.

Sengai Podhuvan, (2008) Silappathigaram, Sarsawathi Mahal Library, Thanjavur, India.

Sethupathi Pilai, (1948) Tamil Enbam, Palayaniyappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License